**தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச நிதித் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 31ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 சனவரி 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச நிதித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரி புத்தகத்தின் பிரகாரம், கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 1,045,734 ஆக காணப்பட்ட போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் அந்த மீதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், திறைசேரிக்கு அனுப்பப்படாத ரூபா 1,045,734 ஆன காசு மீதி நிதி நிலைமைக் கூற்றில் மற்றும் காசு மற்றும் காசுக்கு சமனானவையாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31ஆந் திகதிய 271/2019ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொகைகளை திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் இணக்கம் செய்யப்பட வேண்டியமை. | ரூபா 1,045,734 ஆன தொகை 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான காசுப்புத்தகத்தின் இறுதி மீதி எனவும், அந்த திகதியில் காசுப் புத்தகத்தினை தீர்ப்பனவு செய்து திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் காசுப் புத்தகத்தின் மீதி ரூபா 00.00 ஆகும். |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வைப்புப் பெறுவனவுகள் ரூபா 20,604 மற்றும் வைப்புப் கொடுப்பனவு ரூபா 20,604 மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 03ஆந் திகதிய 271/2019ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த மாதிரிக்கமைய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | வைப்புக் கணக்கின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் இரு புறங்களிலும் பெறுமதி ரூபா 20,604 ஆக காணப்பட்டதுடன், அதன் மூலம் ஏற்படும் பெறுமதி பூச்சியமாகின்றமையும், நிதிச் செயற்பாடுகளின் கீழ் அது தவறுதலாக காண்பிக்கப்படவில்லை என்பதும், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க பொறுப்புடன் செயற்படுவதாக. |

### 1.6.3 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி சீராக்கல் கணக்கின் செலவுப் பக்கத்தின் கூட்டுத்தொகையாக ரூபா 2,466,461 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் கூட்டுத்தொகை ரூபா 2,692,984 ஆக காணப்பட வேண்டும். | கட்டுநிதி சீராக்கல் கணக்கு சரியானதாக தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். தட்டச்சின் போது ஏற்பட்ட தவறெனவும், எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க பொறுப்புடன் செயற்படுவதாகவும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது 2 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 400,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகளில் எதுவித பயன்பாடுமின்றி முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாடுகள் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 04/2019, 05/2019 மற்றும் 07/2019 மூலம் அரச செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டமையால் மிகவும் அவசரமாக மேற்கொள்ள தேவையற்ற பாரிய பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளாதுஈ தேவையான சந்தர்ப்பங்களில் அவ்வாறான பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல் அடுத்த வருடங்களுக்கு பிற்போடப்பட்டமையால் இந்த நிதியேற்பாடு எஞ்சியுள்ளமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 03 மூலதன செலவின விடயங்களுக்காக மற்றும் மீண்டெழும் செலவின விடயமொன்றிற்காக ரூபா 35.39 மில்லியனான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால், அந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 27.43 மில்லியனான நிதியேற்பாது எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் 25.65 சதவீதம் முதல் 98.23 சதவீதமான வீச்சினைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன் வட்டித் தொகையை செலுத்த தேவையேற்படாமை, தேசிய பாதீட்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அரச செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமையால், மீளாய்வாண்டினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பதவியணி ஊக்குவிக்கப்படாமை மற்றும் ஏனைய மூலதன செலவினங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக செலவினம் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செலவினம் மேற்கொள்வதற்கு திட்டமிட்ட போதிலும், தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச செலவினங்களை மேற்கொள்வதை கட்டுப்படுத்த நேர்ந்தமை. |

## 2.2 பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27ஆந் திகதிய 155/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(ஈ) பந்தியின் பிரகாரம் ஏதேனும் நிதியாண்டிற்குரிய அனைத்து பொறுப்புகளும் அந்த ஆண்டினுள் விடுவிக்கப்பட | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2019 ஒக்தோபர் 15ஆந் திகதிய 269/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4.11ஆம் பந்தியின் பிரகாரம் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளின் விபரங்கள் |

வேண்டியதுடன், எந்தவொரு பொறுப்பும் அதற்கடுத்த ஆண்டில் தீர்ப்பனவு செய்யும் எதிர்பார்ப்புடன் முன்கொண்டுசெல்ல கூடாது. அந்த அறிவுரைகளுக்கு முரணாக திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக 06 செலவின விடயங்களின் கீழ் ரூபா 322,461.39 கூட்டுத்தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

ஒவ்வொரு செலவின தலைப்புகளால் நி.பி. 94(1) இன் பிரகாரம் CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அரச கணக்குகள் அறிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடு அல்லது பொறுப்பு 2020ஆம் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்யப்படக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளமையால் குறித்த பொறுப்புகள் CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளமை.

நி.பி. 115இன் பிரகாரம், கடந்த வருடங்களுக்குரிய பொறுப்புகளுக்கு கடப்படுவதற்கு மார்ச் மாதம் 31ஆந் திகதி வரையிலும் இயலுமை உள்ளதுடன், நடைமுறை ரீதியில் ஏற்படும் பிரச்சினைகளின் அடிப்படையில் ஏதேனும் நிதியாண்டிற்குரிய பொறுப்புகள் அங்கீகாரத்துடன், அடுத்த நிதியாண்டிற்கு முன்கொண்டுசெல்ல நேர்கின்றமை மற்றும் பொறுப்புகள் தொடர்பான விபரங்கள் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் திணைக்களத்தின் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மீளாய்வு செய்வதற்குரிய தரவுக் கட்டமைப்பொன்றினை தயாரிப்பதற்கு மற்றும் நாளதுவரையாக்குதல் உள்ளடக்கப்படுவதுடன், இதற்குரிய கணக்காய்வுக்கு MS-excel மூலம் தரவுகள் நாளதுவரையாக்கப்படுகின்றமை குறிப்பிடப்பட்டு அதன் பிரதியொன்று வழங்கப்பட்டிருந்தது. அந்த பிரதியானது கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை மாற்றுவதுடன் தொடர்புடைய தகவல்களை பேணும் பதிவேடாவதுடன், அதன் மூலம் கட்டணங்களை அறவீடு செய்தல் தொடமர்பான தரவுக் கட்டமைப்பொன்று (Database) பேணல் அல்லது மீளாய்வு செய்தல் முடியாது என்பது கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | அரச நிதி திணைக்களத்தின் பரிந்துரைகளை வழங்குவதற்கு முன்னர் அந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள போதுமானதாக இல்லாத போது மீண்டும் அந்த நிறுவனங்களின் விடயங்களை தெளிவுபடுத்தி திறைசேரியின் அங்கீகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது, இந்த திணைக்களத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் Update Data Base என்பதால் அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களை முறையாக MS-Excel மூலம் பேணப்படும் கணனிக் குறிப்புகள் தொடர்பலானது என்பது, தரவுக் கட்டணங்கள் தொடர்பான தகவல்கள் MS-Excel மூலம் பேணப்படும் தரவுக் கட்டமைப்பின் மூலம் கற்கையொன்றினை மேற்கொள்வதற்கு எளிதான வகையில் தயாரிக்கப்படுகின்றமை மற்றும், அவ்வாறல்லாது ஏதாவது ஒரு நிறுவனத்திற்கு பணம் செலுத்தி விசேடமான கணனிக் கட்டமைப்பொன்றினை ஒழுங்கமைப்பதற்கான தேவைப்பாடு இந்த திணைக்களத்திற்கு இல்லை என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் நிதியத்தின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கை வழிகாட்டியொன்றை தயாரித்தல் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய பணிகளாகும்.<br><br>அதன் பிரகாரம், 2017 மார்ச் 31ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமற்ற நிதியங்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களின் மீளாய்வு அறிக்கைகள் மற்றும் அதற்கு உரியதாக திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2018 ஆகஸ்ட் 18ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 13 நிதியங்களை மூடுவதற்கு பரிந்துரை செய்து அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. திணைக்களத்தின் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தற்போதைய செயன்முன்னேற்றத்தின் பிரகாரம், 2020 செப்தம்பர் 22ஆந் திகதி வரையிலும் 05 நிதியங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், 08 நிதியங்களை மூடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன என்பதும் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | 9 நிதியங்கள் மூடப்பட்டு எஞ்சிய நிதியங்களையும் மூடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை. |
| (இ) | 2019ஆம் ஆண்டிற்கான | - மேற்படி - | அரச நிதி முகாமைத்துவ |

| | | | |
|---|---|---|---|
| | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரதான பணிகளினுள் நிதிய முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நிதிய முகாமைத்துவ வழிகாட்டிகள் தயாரிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதிய முகாமைத்துவ வழிகாட்டிகள் 2019ஆம் ஆண்டினுள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | அதிகாரச்சட்டத்தின் கீழ் வெளியிடுவதற்காக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவழிகாட்டிகளுக்கிடையே நிதிய முகாமைத்துவ வழிகாட்டிகள் காணப்பட்டதுடன், 2019 நவம்பர் 26ஆந் திகதிய திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்களின் கூட்டத்தின் போது திறைசேரி செயலாளரிடமிருந்து கிடைத்த அறிவுரைகளின் பிரகாரம் இந்த பணியை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2015ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம், ஆரம்பிக்கப்பட்ட அரச நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தினை வரைபாக்கல் பல வருடங்களாக புதிய உத்வேகத்துடன் அரசின் நிதியை செலவிட்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இது 2019ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்களின் கூட்டத்தின் போது திறைசேரி செயலாளரிடமிருந்து கிடைத்த அறிவுரைகளின் பிரகாரம் இந்த பணியை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அரச நிதியுடன் தொடர்புடையதாக தயாரிக்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளும் இரத்துச்செய்யப்பட்டு, அந்த விடயங்களை திருத்தியமைத்து, நிதிப் பிரமாணத்திற்கு தேவையான காலத்திற்குகந்த சீராக்கங்களையும் மேற்கொண்டு 9/2020 மற்றும் 02/2020ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2019ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று உரிய மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிராததுடன், செயலாற்றல் அறிக்கையும் 2019ஆம் ஆண்டிற்கான சாத்தியவள அறிக்கையுடன் இணங்குகிறது என குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். சுற்றறிக்கையின் பிரகாரம், 2019ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று உரிய மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றும் செயலாற்றல் அறிக்கையில் ‘‘இணங்குகின்றது’’ என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் , அது ‘‘இணங்கவில்லை’’ என திருத்தப்பட வேண்டும் என்பதும், 2020ஆம் ஆண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பதும். |
| (ஆ) | சில உத்தியோகத்தர்கள் செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிட்டிராததுடன், செயலாற்றல் அறிக்கையும் 2019ஆம் ஆண்டிற்கான சாத்தியவள அறிக்கையுடன் இணங்குகிறது என குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | 02/2018ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், நிறுவனத்திற்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் மாதிரிக்கமைய நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் என்பதால் குறிப்பிடப்படுவது, வருடாந்தம் ஒவ்வொரு உத்தியோகத்தராலும் அளவையியலாளர் மற்றும் மதிப்பீட்டாளர் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | | | கையொப்பமிடப்படும் செயலாற்றல் என கருதி ‘‘இணங்குகின்றது’’ என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக ஏனைய செயலாற்றல் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டும் எனின் அந்த செயலாற்றல் அறிக்கையை கைச்சாத்திடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |
| (இ) | 2018 சனவரி 24ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடமொன்றிற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும், உள்ளபடியான 64 பதவியணியில் 23 பேருக்கு மாத்திரம் பயிற்சி சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன், செயலாற்றல் அறிக்கையில் 2019ஆம் ஆண்டிற்கான சாத்தியவள அறிக்கையில் இணங்குகிறது என குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2019ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று உரிய மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிராததுடன், ஒவ்வொரு உத்தியோத்தருக்கும் ஒவ்வொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றினை வழங்கும் நோக்கில் திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் போது பல்வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் பதவியணிக்கு அறிவிக்கப்படுவதுடன், அதற்கு விருப்பினை வெளிப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்கும் இயலுமை உள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பித்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. |

4. **மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 11 வெற்றிடங்கள் நிலவுவதுடன், அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 14.6 சதவீதம் ஆகும். இந்த வெற்றிடத்தினுள் சிரேஷ்ட மட்டத்திலான 10 வெற்றிடங்கள் நிலவுவதுடன், இந்த பதவிகள் தொடர்ச்சியாக வெற்றிடமாக காணப்பட்டது. | தேவைப்பாட்டிற்கமைய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அல்லது பதவியணியை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இந்த திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 77 ஆக காணப்படுவதுடன், தற்போதைய வெற்றிடங்களின் எண்ணிக்கை 13 ஆகும். இந்த வெற்றிடங்களில் 12 வெற்றிடங்கள் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளாகும். தற்போது நிதி அமைச்சினால் பதவியணியை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அந்த திருத்தத்தின் மூலம் தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்ப இயலுமானதாக இருக்கும். |